# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். மத்தேயு 5:5**

**மன்னா – 11 மார்ச் 2021 பிரதி – 12**



# ஆயர் மடல்



கிறிஸ்துவில் பிரியமானவர்களே! புதிய ஆண்டின் மூன்றாவது மாதத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இம்மாதம் இறை ஆற்றல் நம்மை நிரப்ப பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

புதிய மாதத்தில் நாம் சந்திக்கும் அனுபவங்கள், நமக்கு கொடுக்கப்படும் பணிகள், நமது பயணங்கள் அனைத்தும் நம்மை ஆற்றல்படுத்தட்டும். நாம் சந்திக்கும் மனிதர்கள், நமக்கு ஏற்படும் நிகழ்வுகள் நம்மை வளரச் செய்யட்டும். புதிய உத்வேகத்தோடு நமது வாழ்வை ஜெபத்தோடு தொடருவோம்.

## தேசத்துக்காய்:-

நாம் தங்கியுள்ள ஓமான் தேசத்தில் உருமாறிய கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் உள்ளது. இந்நிலை மாறவும், கொடிய நோயின் தாக்கம் நீங்கவும், அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும் பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

## திருச்சபைக்காய்:-

நமது திருச்சபை ஆண்டவரால் உருவாக்கப்பட்டது. பணிசெய்யும் இடத்தில் பணிந்துகொள்ள கர்த்தர் நமக்கு தந்த பரிசுத்த இடம் என்னும் உணர்வோடிருப்போம். பெருமை, பொறாமை, பகைமை, பழிவாங்குதல் இவைகளை களைந்து கிறிஸ்துவுக்குள் இணைந்து ஒரே கடவுளின் பிள்ளைகளாய் அர்ப்பணித்து செயல்பட அன்போடு அழைக்கிறேன்.

## தனிவாழ்வுக்காய்:-

தவக்காலங்களில் வாழும் நாம் தனிப்பட்ட வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்பதும், அவர்வழி நடக்க தீர்மானிப்பதும், இறைபாதம் அமர்ந்து தியானிப்பதும் நல்லது. காலத்தின் அருமையை அறிந்து வாழ முற்படும்போது கடவுளின் ஆசி நம்மை நிரப்பும்.

சாந்தமாய் வாழ்வோம்! சந்தோஷமாய் வாழ்வோம்!
சமாதானமாய் வாழ்வோம்! சமநிலையோடு வாழ்வோம்!


கர்த்தர் தாமே சகல ஆசீர்வாதங்களினாலும், நன்மைகளினாலும் நிரப்பி வழிநடத்துவாராக! ஆமென்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

### சாந்தம் - சாந்தகுணம்

“சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை” (கலாத்தியர் 5:23).




இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே! பிரமாணம் என்பது அடிப்படை உரிமை மற்றும் உடன்படிக்கையை மையமாகக் கொண்ட ஒரு உறுதிப்பாடு. இந்த உறுதிப்பாட்டில் ஒன்றுதான் சாந்தம். சாந்தம் என்னும் வார்த்தை அது ஒரு சொல்லாக அல்ல பண்பாகவே வெளிப்படுத்தப்படவேண்டும்.

“மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும், மிகுந்த சாந்தகுண-முள்ளவனாயிருந்தான்” (எண். 12:3).

எனவேதான் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த மோசேயைத் தெரிந்துகொண்டார். இறை இயேசு மலைப்பொழிவில் குறிப்பிடும்போது “சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள்” (மத்தேயு 5:5) என வெளிப்படுத்துகிறார்.

திருமறை அடிப்படையிலும், இயேசு கிறிஸ்துவின் போதனை அடிப்படையிலும் சாந்தகுணம் நம் வாழ்வில் நிறைந்திருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறார். சாந்தகுணத்தால் நாம் இறைவனிடம் பெறும் நன்மைகள் குறித்து இணைந்து தியானிப்போம்.

#### 1. திருப்தியடைவார்கள்:-

“சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்” (சங்கீதம் 22:26).

உலக வாழ்வில் திருப்தியடையும் மனிதர்களை காண்பது அரிது. திருமறை கூறும் உண்மை சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள். எனவே நாம் வாழ்வில் திருப்தியடைய சாந்தகுணம் அவசியமாகிறது என்பதை திருமறை உணர்த்துகிறது.

**2. போதிக்கப்படுவார்கள்:-**

“சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்” (சங். 25:9).

வாழ்வு என்பது ஆண்டவரால் வழிநடத்தப்படவேண்டும் அதுவே சிறப்பு. குறிப்பாக மனித வாழ்வின் சிறப்பு நியாயத்திலே நடத்தல். அநியாயத்திலே நடக்கும் மனிதர்கள் மத்தியில் நியாயத்திலே நடத்தப்படும் மனிதர்கள் சாந்தகுணமுள்ளவர்களாய் கர்த்தரால் போதித்து நடத்தப்படுகிறார்கள் என திருமறை கூறுகிறது.

**3. சுதந்தரிப்பார்கள்:-**

“சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்து மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்” (சங்கீதம் 37:11).

பூமியை சுதந்தரிப்பது என்பது சொத்துக்களை சேர்ப்பதோ, இல்லங்களை கட்டி எழுப்புவதோ, பணக்கார வாழ்வு வாழ்வதோ அல்ல. மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருக்கும் வாழ்வு. அந்த வாழ்வு சாந்தகுணத்தால் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும் என திருமறை அறிவுறுத்துகிறது.

**4. சந்தோஷப்படுவார்கள்:-**

“சாந்தகுணமுள்ளவர்கள் இதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்; தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்” (சங்கீதம் 69:32).

மனித வாழ்வில் இரட்சிப்பின் அவசியத்தை திருமறை அதிகமாக வலியுறுத்துகிறது. சாந்தகுணமுள்ளவர்கள் இரட்சிப்பைக் கண்டு சந்தோஷம் அடைவார்கள் என வேதம் தெளிவுப்படுத்துகிறது. இன்று நாம் இரட்சிப்பின் அனுபவம்பெற வேண்டுமென்றால் “இரட்சிப்பினால் அலங்கரிக்கப்பட” வேண்டுமென்றால் (சங்கீதம் 149:4) சாந்தகுணம் தேவையாயுள்ளது.

**5. உயர்த்தப்படுவார்கள்:-**

“கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார். துன்மார்க்கரை தரைமட்டும் தாழ்த்துகிறார்” (சங்கீதம் 147:6).

உலகத்தில் உயர்வுபெறவே அனைத்து மனிதர்களும் விரும்புகின்றனர். உண்மையான உயர்வு கர்த்தரிடத்திலிருந்து வருகிறது. கர்த்தர் தம்முடைய பார்வையில் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார் எனத்

திருமறை நமக்குக் கட்டளையிடுகிறது. துன்மார்க்க ஜீவியம் தரைமட்டும் தாழ்த்திப்போடும் என்றும் எச்சரிக்கிறது.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! கர்த்தர் நம்மை காண்கிறார் என்னும் உணர்வு நமக்கு ஏற்படவேண்டும். அது மட்டுமல்ல கர்த்தர் நம்மை சோதித்து அறிகிறார் என்றும் நாம் அறிந்திருக்கவேண்டும். அத்தோடு நமது குணநலன்களுக்கும், செயல்பாடுகளுக்கும் ஏற்பவே பலனளிக்கிறார் என்று நாம் தெரிந்துகொண்டால் ஆண்டவருக்குப் பிரியமான சாந்தமான வாழ்வு நம்மால் வாழ இயலும்.

சாந்தகுணமுள்ளவர்களாய், பாக்கியவான்களாய், பூமியை சுதந்தரிப்பவர்களாய் வாழ்ந்திருக்க கர்த்தர்தாமே வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## காத்துக்கொள்



ஒரு யுத்தத்தில் எதிரி நாட்டு இளவரசனை உயிரோடு பிடித்து இராஜாவின் முன்பு நிறுத்தினர். இளவரசன் தன் உயிருக்காக கெஞ்சி மன்றாடி தன்னை மன்னிக்கும்படியாக கேட்டுக்கொண்டான். அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது என்றார் வெற்றிப்பெற்ற ராஜா. விளிம்புவரை தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்று உனது கையில் தரப்படும், அது முக்கிய சாலை ஒன்றின் வழியாக ஒரு சொட்டு தண்ணீர் கூட கீழே சிந்தாமல் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஒரு மையில் தூரம் கொண்டு செல்லவேண்டும். கூடவே உருவிய பட்டயத்தோடு எனது வீரர்கள் வந்துக்கொண்டு இருப்பார்கள். ஒருதுளி தண்ணீர் கீழே கொட்டினாலும் கூட அவர்களின் வாள் உன் தலையைச் சீவிவிடும். வெற்றியோடு முடித்துவிட்டால் விடுதலை என்று பேரரசர் தன்னுடைய நிபந்தனையை விதித்தார்.

குறிப்பிட்ட நேரம் வந்தது. இலட்சக்கணக்கான மக்கள் அந்த சாலையின் இரு பகுதிகளிலும் குழுமியிருந்தனர். போர் வீரர்கள் சாலையை ஒழுங்கு செய்து கொடுத்தனர். பேரரசர் முன்னிலையில் முழுவதும் தண்ணீர்

நிரப்பிய பாத்திரம் இளவரசனின் கையில் கொடுக்கப்பட்டது. ஒரு பகுதியில் இருந்த மக்கள் இளவரசனை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினர். மறுபக்கத்தில் இருந்தவர்களோ கேலியும், பரியாசமும் செய்து கூச்சலிட்டனர். இளவரசனின் இருபுறமும் வீரர்கள் உருவிய வாளோடு தண்ணீர் சிந்துமானால் வெட்டும்படி கவனித்துக்கொண்டிருந்தனர்.

பாத்திரத்தை உறுதியாய் பிடித்துக்கொண்டான். இளவரசன் நடக்க சுற்றுபுறத்திலிருந்து கூச்சலும், பரிகாசமும், ஆர்ப்பாட்டங்களும் கேட்டுக்கொண்டே இருந்தது. எனினும் எதையும் பொருட்படுத்தாதபடி தண்ணீரிலே முழு கவனமும் வைத்து ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தான் இளவரசன்.

இளவரசனை பாராட்டிய பேரரசர், இளவரசனே உன்னை கேலி செய்தவர்களுக்கு நீ தண்டனை வழங்கலாம். உன்னை உற்சாகப்படுத்தியவர்களுக்கு நன்றி சொல்லலாம். அவர்களை கவனித்து வைத்திருக்கிறாயா? என்று கேட்டார். அதற்கு அந்த இளவரசன் ‘என்னை போற்றுபவர்களை நான் கவனிக்கவில்லை. என்னை தூற்றுபவர்களையும் நான் பார்க்கவில்லை. எனது கவனமெல்லாம் தண்ணீரில் அல்லவா இருந்தது’ என்றான்.

விடுதலையோடு கூட அரசர் ஒரு ஆலோசனை தந்தார். இளவரசனே! பாத்திரத்தில் உள்ள தண்ணீர்தான் உன் சரீரத்தில் உள்ள ஆன்மா. வாழும் நாட்களிலே உன் ஆத்மாவில் கண்ணும் கருத்துமாக இருந்து கடைசியில் அதை சிருஷ்டிகர்த்தாவிடம் ஒப்படைக்கவேண்டும். போற்றுவோரைக் கண்டு பெருமை கொள்ளாதே. தூற்றுவோரைக் கண்டு சோர்ந்துப் போகாதே. ஆத்துமாவில் கவனம் வை என்றார்.

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## நீடிய சாந்தம் - பெண்களுக்கு வேண்டும்

பெண்கள் சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! சாந்தம் என்னும் தலைப்பில் இந்த மாத மன்னா வெளிவருகிறது. நான் திருமறையிலே சாந்தத்தைக் குறித்து தியானித்தேன். பெண்களாகிய நமக்கு சாந்தத்தைக் காட்டிலும் நீடிய சாந்தம் தேவை என்று உணர்ந்தேன்.

**நீடிய சாந்தம் - கர்த்தரின் பண்பு:-**

கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும். மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன் (யாத். 34:6).

நீடிய சாந்தம் என கர்த்தரின் பண்பைக் குறித்து திருமறை குறிப்பிடுகிறது. தாவீது ராஜா குறிப்பிடும்போது சங்கீதம் 103:8, 145:8 ஆகிய வசனங்கள் கர்த்தரின் நீடிய சாந்தத்தை வெளிப்படுத்தி நிற்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

**மகா புத்திமான்:-**

"நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான். முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான்" (நீதி 14:29).




பெண்களாகிய நாம் முற்கோபியாய் இருப்போமேயாயின் நமது புத்தியீனம் மற்றவர்களுக்கு தெரிவிப்பவர்களாய் இருப்போம். நாம் நம்முடைய நீடிய சாந்தத்தினால் குடும்பத்தை கட்டியெழுப்பும்போது கர்த்தர் நமக்கு துணையிருந்து செயல்படுவார். கர்த்தரின் பண்பாகிய நீடிய சாந்தத்தை செயல்படுத்தவே கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறார்.

புத்திசாலியான பெண் இல்லத்தை கட்டியெழுப்புகிறாள் என திருமறை கூறுகிறது. மகா புத்திமான்களாக நாம் வாழ வேண்டுமாயின் நீடிய சாந்தத்தை நாம் வாழ்வில் செயல்படுத்துகிறவர்களாக மாறவேண்டும், வாழவேண்டும் என ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

**சண்டையை அமர்த்துகிறவன்:-**

"கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான். நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்" (நீதி. 15:18).

பொதுவாக குடும்பத்திலும் சரி, நண்பர்களிடத்திலும் சரி கோபத்தினால் சண்டை வருகிறது. எனவேதான் திருமறை 'கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்', இதை நான் கோபக்காரி சண்டையை எழுப்புகிறாள் என படித்துப் பார்த்தேன். இதற்கு எதிர்ப்பதம் நீடிய சாந்தம். நமது வாழ்வில் நீடிய சாந்தகுணம் உடையவர்களாக இருக்கும்போது சண்டை அமர்த்தப்படுகிறது என்பதை உணர்ந்து செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

நீடிய சாந்தகுணத்தால் சண்டை அமர்த்தப்பட்டு அன்பு மேலோங்கும் எனத் திருமறை கற்றுத் தருகிறது.

“அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்கு பொறாமையில்லை. அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது” (1கொரி. 13:4).
அன்புடன் கூடிய நீடிய சாந்தம் நம் குடும்ப வாழ்வை கட்டியெழுப்பும் என திருமறைக் கூறுகிறது. எனவே இறைவாக்கிற்கு ஏற்ப நீடியசாந்தமுள்ளவர்களாய் செயல்பட்டு இறைத்திட்டத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற நீடிய சாந்தமுள்ள கர்த்தர் நமக்கு தயை செய்வாராக. ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ குளோரிந்தாள்

### தடைகள் தகரட்டும்



மண்ணில் :
விண்ணில் : 1806
ஊர் : தஞ்சாவூர்
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

இந்தியாவைச் ‘சமயங்களின் சங்கமம்’ என்று அழைக்கலாம். ஏனெனில் பல சமயங்கள் இந்தியாவிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டன. அதே வேளையில் இந்தியாவை ‘மூடத்தனங்கள் நிறைந்த நாடு’ என்றுகூடக் கூறமுடியும். ஏனெனில் ஒரு காலத்தில் உலகத்தில் எவ்வித பாகங்களிலும் நடைபெறாத கொடிய சம்பவங்கள் இங்கே நடந்ததுண்டு.

சதி, உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், பெண்கல்வி மறுத்தல் இன்னும் பல இதற்கு உதாரணங்களாகும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு அழகிய இளம்பெண், கணவன் இறந்துவிட்டான். பிணத்தோடு சேர்த்து அவளையும் சுட்டெரிக்க இழுத்துச் செல்லப்பட்டாள். இதனை அறிந்த கர்னல் லிட்டில்டன் விரைந்துசென்று அவளைக் காப்பாற்றினார். ஆனால் ஊரார் அவளை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் லிட்டில்டன் அவளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அப்பெண்ணே குளோரிந்தாள் ஆவார்.

கிறிஸ்தவ சித்தாந்தங்களை லிட்டில்டன் பிரபு மூலம் அறிந்துகொண்ட குளோரிந்தாள் ஞானஸ்நானம் பெற விரும்பி சுவார்ட்ஸ் ஐயரிடம் புதுபிறப்பு அடைந்தாள். அன்றுமுதல் காண்பவரிடமெல்லாம் கிறிஸ்துவைப்பற்றிக் கூறி ஆத்தும ஆதாயப் பணியைச் செய்தார். 1780-ம் ஆண்டு 40 பேர் இவரால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட விரும்பிய குளோரிந்தாள் அம்மையார் 1785-ம் ஆண்டு நெல்லையில் முதல் ஆலயத்தைக் கட்டினார். சிறு பள்ளிக்கூடத்தையும் ஆரம்பித்தார்.

ஆச்சாரம் மிக்க பிராமணக் குடியில் பிறந்து, சாதி ஆசாரங்களைத் தகர்த்து, ஏழை எளியவர்களுடன் சமமாக பழகி, அவர்களுக்கு பண உதவி அளித்து, அவர்கள் ஆன்மீக முன்னேற்றத்திற்காக உழைத்து, தனக்கென ஒரு முத்திரையைத் திருச்சபை வரலாற்றில் பதித்த குளோரிந்தாள் நமக்கு ஓர் தூண்டுகோல்!

அன்பரே! சாதி மதங்களைக் கடந்து, கிறிஸ்துவை பிறர்க்கு அறிவிப்பவரா நீங்கள்?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : உன் ஓய்வினை சீக்கிரம் எடுத்துக்கொள்ளாதே. எடுத்துக்கொண்டால் உனது உண்மை ஓய்வினை நீ அடைய முடியாது.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! தடைகள் அனைத்தையும் தாண்டி, தலை நிமிர்ந்தபடி உமக்கு ஊழியம் செய்வேன்.

**தியானத்திற்கு** : லேவி. 8, சங்கீதம் 108, 1கொரிந்தியர் 16

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **திரு. ரெக்ஸ் மேசிடோ** அவர்களின் தகப்பனார் **திரு. பாஸ்கரன்** அவர்கள் பெப்ரவரி மாதம் 11-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள்.

நமது சபை அங்கத்தினர் **திரு. செல்வகுமார்** அவர்களின் தகப்பனார் **திரு. செல்வராஜ்** அவர்கள் பெப்ரவரி மாதம் 17-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள்.

தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## கேள்விகள்

கேள்விகள் என்றால் பிறரிடம்தான் கேட்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நமக்கு நாமே கேள்விகளைக் கேட்டுக்கொள்ளலாம். எந்த மாதிரியான கேள்விகளை நான் என்னிடம் கேட்கமுடியும் என்பதற்கு சில உதாரணங்கள் இதோ,



1. என்னுடைய பலம் என்ன?
2. என்னுடைய குறைபாடுகள் என்ன?
3. எனக்கு ஏன் இன்னும் சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை?
4. ஏன் என்னிடம் பொருளாதாரம் குறைவாக உள்ளது?
5. என்னுடைய உடல்நல குறைவின் காரணம் என்ன?
6. ஏன் நான் சரியான முடிவுகள் எடுப்பதில்லை?
7. என்னுடைய வளர்ச்சிக்குத் தடைகள் என்ன?
8. எனக்கு எப்போதும் எதிர்மறை சிந்தனைகள் வருவதின் காரணம் என்ன?
9. ஏன் எனக்குத் தேவையற்ற கோபம் அதிகம் வருகிறது?
10. ஏன் என்னால் வீட்டில் நிம்மதியாக இருக்க முடிவதில்லை?

இதுபோன்ற கேள்விகள் நமக்கு நாமே கேட்பதால், நம்முடைய குறைகளை சரிசெய்ய வேண்டிய வழிகள் பற்றிய தேடல்கள் நம்மினுள் துவங்குகின்றது. இதுதான் நமது வளர்ச்சிக்கான ஆதாரம். வாழ்க்கையின் இலட்சியத்தை நோக்கி அதனால் நம்மாலும் வேகமாக முன்னேற இயலும். இதுவே தவக்காலத்தின் சிறப்பு. திருமறை படித்தலும், இறைவார்த்தை கேட்பதும், இறைபாதம் அமர்வதும் நம்மை உருவாக்கும்.

# லெந்து காலம் ~ நாற்பது நாட்கள்

லெந்துகாலத்தை தவக்காலம் என்றும் அழைப்பதும் உண்டு. இந்த காலம் உடலை வருத்திக்கொள்வதற்கு அல்ல, உள்ளத்தைத் திருத்திக் கொள்வதற்கே. சாம்பல் புதன் முதல் ஈஸ்டர் வரை ஓய்வுநாட்கள் நீங்கலாக நாற்பது நாட்கள் இதை ஆசரிக்கிறோம். நாற்பது என்ற எண் திருமறையில் ஆன்மீக பொருள் மிகுந்த எண்ணாக இருக்கிறது.





கடந்த மாதத்தின் 17-ம் தேதி சாம்பல் புதன் ஆராதனை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வருகிற நாட்களை நாம் தவக்காலமாக ஆசரிக்கிறோம். வழக்கமாக ஒவ்வொரு நாளும் திருமறை வாசித்து, ஜெபிக்கிற பழக்கம் சிலரிடத்தில் உண்டு. ஆனால் லெந்துகாலங்கள் இன்னும் அதிகமாய் ஆண்டவருக்குள்ளாய் வளர உபயோகமாய் இருக்கும். ஏதோ நாம் அதிகப்படியாய் செய்கிற சில செலவினங்களைக் குறைத்து சுயஒறுத்தலின் அடையாளமாக நமது கரங்களில் தரப்படுகிற உண்டியலில் காணிக்கையாக்கி ஆலயத்திலே படைக்க ஆயத்தப்படுவோம். தரித்திரர்களுக்கு இரங்குவதும் நமது கட்டாயமான கடமை. இந்த சிறியரில் ஒருவருக்கு செய்யும் நற்கிரியை, தானதர்மம் நமது ஆண்டவருக்கு நாம் செய்யும் நற்கிரியை எனத் திருமறை கூறுகிறது. எனவே லெந்துகாலத்தை சரியாய் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

நோவா கால பெருவெள்ளம் நாற்பது நாட்கள் நீடித்தது. 10 கட்டளைகளைப்பெற மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் கர்த்தரோடு இருந்தார். ஓரேப் மலையில் எலியா நாற்பது நாட்கள் கர்த்தரோடு நடந்துள்ளார். நினிவேக்கு யோனா எச்சரிப்புக் கொடுக்கும்போது இன்னும் நாற்பது நாட்கள் என்று எச்சரித்துள்ளார். இந்த பின்னணியில் தான் லெந்து நாட்கள் நாற்பது நாட்களாக ஆசரிக்கப்படுகிறது. நாமும் இந்த நாட்களை பிரயோஜனப்படுத்திக்கொள்வோம்.

# கிறிஸ்துவும் சாந்தமும்

## சாந்தம் தரும் இளைப்பாறுதல்:-

"நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத்தேயு 11:29).




இளைப்பாறுதலின் வழி "சாந்தம், மனத்தாழ்மை" என்று அறியாமல் பலர் பெருமையோடு நின்று என்னிடம் பணம் இருக்கிறது, பொருள் இருக்கிறது, பணத்தை இறைத்து வக்கீல்களையும், டாக்டர்களையும், போலீஸ் அதிகாரிகளையும் விலைக்கு வாங்கிவிடுவேன், எல்லாக் காரியங்களையும் நேர்த்தியாய் நடத்திவிடுவேன் என்று நினைத்து, முடிவில் தோல்வியடைந்து இளைப்பாறுதலை இழக்கிறார்கள்.

மறுபக்கத்தில் இயேசு நின்று நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள் என்று அழைக்கிறார். நம் ஆண்டவரின் சாந்தகுணம் நம் உள்ளத்தையெல்லாம் உருக்குகிறது. அவர் மகிமையின் ராஜாவாய் இருந்தபோதிலும், சகலத்தையும் சிருஷ்டித்தபோதிலும் நமக்காக தாழ்மையோடும், சாந்தத்தோடும் பூமியில் இறங்கி வந்தார். தாழ்மையான மாட்டுக்கொட்டகையில் ஜென்மித்தார். ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் இருந்தது. அவருக்கோ தலைசாய்க்க இடமில்லை.

சிலுவையில் எத்தனையோ நிந்தனைகள், அவமானங்கள், பரியாசங்கள். அவர் தாழ்மையுள்ளவராகவே காணப்பட்டார். தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (பிலி. 2:6).

இனம்புரியாத பயமும், திகிலும் நம்மை வாட்டும்பொழுது நாம் நம் சாந்தகுணத்தையும், பொறுமையையும் இழந்துவிடாமல் இயேசு, இயேசு என்று பல நூறு முறை திரும்ப திரும்பச் சொல்லி அவரிலே சார்ந்து

வாழ்ந்து ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். தவிர ஒருபோதும் குறுக்கு வழியில் சமாதானத்தைப்பெற முயற்சிக்கக்கூடாது. சிலர் மனம் சாந்தமடைய சினிமா தியேட்டருக்குப் போகிறேன் என்று சொல்லுவார்கள். சிலர் மதுபானக் கடைகளிலே தஞ்சம் புகுந்துவிடுவார்கள். இது வேதனையை அதிகப்படுத்துமே தவிர ஒருபோதும் சமாதானத்தையும், மனசாந்தத்தையும் தந்துவிடாது.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக சத்துருக்களும், விரோதிகளும் பெருகி சமாதானத்தை இழந்த நேரங்களில் எல்லாம் கர்த்தரைத் தேடுவதற்கு ஒருமனப்பட்டார்கள். நாமும் அப்படிப்பட்ட இறைவனைத்தேடி சாந்தக்குணத்தை, பொறுமையைப் பெற்று இளைப்பாறுதல் அடைய முயலுவோம். சாந்தம் தந்து நம்மை சமாதானத்தோடு வாழவைக்க சாந்தகுணமுள்ள ராஜா ஆவலாய்க் காத்திருக்கிறார்.

### சாந்தகுணமுள்ள ராஜா:-



“இதோ உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின் மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்” (மத்தேயு 21:4).

கிறிஸ்துவின் சாந்தகுணம் சோதிக்கப்படும் நேரங்கள் வந்தது. அவருடைய தாடி மயிரைப் பிடித்து இழுத்தார்கள், தலையில் குட்டினார்கள், முகத்தில் துப்பினார்கள், கேலியும் பரிகாசமும் செய்தார்கள், அவரோ தன் வாயைத் திறக்கவில்லை. தான் சாந்தகுணமுள்ள ராஜா என்பதை நிரூபித்தார்.

ஆம் அருமையானவர்களே! அவர் நம் ராஜாவாயிருப்பாரானால் “உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக” (பிலிப்பியர் 4:5) என்ற வசனத்திற்கு இணங்க வாழ்வோம். கர்த்தர் சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார் (சங்கீதம் 147:6), “சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு” (1தீமோத்தேயு 6:11).

- **V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## சாந்தம்

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

தமிழ் அகராதியில் 'சாந்தம்' என்ற வார்த்தைக்கு அடக்கம், அமைதி, பொறுமை என்று பொருள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீடிய பொறுமையும், சாந்தமும் உடையவர் என்று வேதாகமத்தில் சங்கீத புஸ்தகத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது (சங்கீதம் 103:8, 145:8).

நெகேமியா புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவத்தை இங்கே காண்போம். இஸ்ரவேல் ஜனங்கள் அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தை கடினப்படுத்தி ஆண்டவரின் கற்பனைக்குச் செவிகொடாதே போனார்கள். ஆகிலும் மன்னிக்கிறவரும், இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுள்ளவருமான தேவனாகிய கர்த்தர் அவர்களைக் கைவிடவில்லை என்று நெகேமியா தீர்க்கதரிசி சொல்கிறான் (நெகேமியா 9:17).



அப்படிப்பட்ட நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மோசேயைக் குறித்து சாட்சி சொல்கிறார் இவ்விதமாக;

மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (எண்ணாகமம் 12:3).

ஒருமுறை அந்த மோசேக்கு விரோதமாக மிரியாமும், ஆரோனும் பேசியதை கர்த்தர் கேட்டு அவர்களை அழைத்து, என் தாசனாகிய மோசே தீர்க்கதரிசி மாத்திரம் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் முகமுகமாகவும், பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன். அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் மோசேக்கு விரோதமாகப் பேச உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்று அவர்கள்மேல் கோபங்கொண்டு மிரியாமை தண்டிக்கிறார் (எண். 12:1-10).

சாந்தகுணம் உள்ளவர்கள்மேல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எந்தளவிற்கு பிரியமாய் இருக்கிறார் என்பதை இதன்மூலம் நாம் உணரமுடிகிறது.

**வேதவசனத்தின் அடிப்படையில் சாந்தகுணம் உள்ளவர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்;**

சங்கீதம் 22:26 – புசித்து திருப்தியடைவார்கள்.

சங்கீதம் 25:9 – கர்த்தர் அவர்களை நியாயத்தில் நடத்தி தமது வழியைப் போதிக்கிறார்.

சங்கீதம் 37:11 – மிகுந்த சமாதானத்தோடு மனமகிழ்ச்சியாய் இருப்பார்கள்.

சங்கீதம் 147:6 – கர்த்தர் அவர்களை உயர்த்துவார்.

சங்கீதம் 149:4 – கர்த்தர் அவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

1பேதுரு 3:4 – தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்.

மத்தேயு 5:5 – பாக்கியவான்கள், பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

**வேதவசனத்தின் அடிப்படையில் சாந்தகுணம் உள்ளவர்களின் குணங்கள்;**

நீதி. 14:29 – மகா புத்திமான்கள்

நீதி. 15:18 – சண்டையை அமர்த்துகிறவர்கள்

நீதி. 16:32 – உத்தமனாய் நடப்பவர்கள்

1தெச. 5:14 – திடனற்றவர்களைத் தேற்றுகிறவர்கள், பலவீனரைத் தாங்குபவர்கள்

2தீமோத். 2:34 – தீமையை சகிக்கிறவர்கள்

2தீமோத். 4:2 – புத்தி செய்கிறவர்கள்

தீத்து 3:2 – ஒருவரையும் தூஷியாதவர்கள்

**நாம் சாந்தகுணத்தை எப்படி பெற்றுக்கொள்வது?:-**

மத்தேயு 11:29 – கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார்; நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்.

யாக்கோபு 3:17 – பரலோகத்திலிருந்து வருகிற ஞானமே சாந்தகுணம் நிறைந்ததாய் இருக்கிறது. தேவனிடத்தில் தினந்தோறும் அமர்ந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

1கொரிந்தியர் 13:4 – அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நாம் அனைவரிடத்திலும் அன்பு செலுத்த பழகவேண்டும்.

1தீமோத்தேயு 6:11 – சாந்தகுணத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையோடு தேடவேண்டும்.

கிறிஸ்தவர்கள், விசுவாசிகள், இரட்சிக்கப்பட்டவர்கள் என்று பெருமையாக சொல்லிக்கொள்ளும் நாம் சாந்தகுணம் கொண்டவர்களாக இருக்கின்றோமா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

- **கனகவேல்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ மார்ச் 2021

| | | |
|---|---|---|
| 05-03-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sapthikha Jerry |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sylus |
| 12-03-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Thamari Johnson |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Santhosh Christopher |
| 19-03-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Vanitha Rani Prince |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Vinolin |
| 26-03-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Virgin Jegatha Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Vinil Singh |
| 01-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Aspin Bejo |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Victor Thayasingh |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 04-03-2021 | வியாழன்–இரவு ஜெபக்கூடுகை |
| 05-03-2021 | வெள்ளி ஆராதனை |
| 12-03-2021 | வெள்ளி ஆராதனை |
| 19-03-2021 | வெள்ளி ஆராதனை |
| 26-03-2021 | வெள்ளி ஆராதனை |
| 01-04-2021 | வியாழன் - அருணோதய ஆராதனை |
| 01-04-2021 | வியாழன் - வியாகுல வியாழன் ஆராதனை |
| 02-04-2021 | வெள்ளி – புனித வெள்ளி ஆராதனை |

## மார்ச் 2021 மாத கேள்விகள்
### (1,2 தீமோத்தேயு முழுவதும்)

1. எல்லாத் தீமைக்கும் வேர் எது?
2. சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது எது?
3. பவுலுக்கு அதிக தீமை செய்தது யார்?
4. பவுலை அநேகந்தரம் இளைப்பாற்றியது யார்?
5. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தது யார்?
6. அற்ப பிரயோஜனமுள்ளது எது?
7. மோசேக்கு எதிர்த்து நின்றவர்கள் யார்?
8. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடினால் கிடைப்பது எது?
9. யார் அமைதலாய் இருக்கவேண்டும்?
10. தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறவன் யார்?
11. பவுலின் மேலங்கி யாரிடம் இருந்தது?
12. வேதவாக்கியங்களெல்லாம் எதனால் அருளப்பட்டிருக்கிறது?
13. நல்ல வேலையை விரும்புகிறவன் யார்?
14. உயிரோடே செத்தவள் யார்?
15. தீமோத்தேயுவின் தாய் யார்?
16. தேவன் எப்படி வெளிப்பட்டார்?
17. கெட்ட சிந்தையுள்ள மனுஷர்களால் எது உண்டாகும்?
18. யார் பலனில் முந்தி பங்கடையவேண்டும்?
19. சீர்கேடும், கிழவிகள் பேச்சுமாயிருப்பது எது?
20. தூஷியாதபடி சிட்சிக்கப்பட சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள் யார்?

## பெப்ரவரி 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. விசுவாசமுள்ள ஜெபம் - யாக். 5:15
2. இருமனமுள்ளவன் - யாக். 1:8
3. நாவு – யாக். 3:6
4. இழிவான ஆதாயத்துக்காக – தீத்து 1:11
5. ஒநேசிம் - பிலே. 1:10

6. பொறுமையை – யாக். 1:3
7. நீடிய பொறுமையோடே – யாக். 5:7
8. ராகாப் - யாக். 2:25
9. பவுல் - பிலே. 1:8
10. ஜீவகிரீடத்தை – யாக். 1:12
11. துதித்தலும், சபித்தலும் - யாக். 3:10
12. யாக்கோபு – யாக். 1:1
13. கிரேத்தாதீவார் - தீத்து 1:12
14. தேவனுக்கு – யாக். 4:4
15. இரக்கம் - யாக். 2:13
16. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் - யாக். 5:16
17. சந்தேகப்படுகிறவன் - யாக். 1:6
18. வேதபுரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு – தீத்து 3:10
19. கலகமும் சகல துர்ச்செய்கைகளும் - யாக். 3:16
20. இவ்வுலகத்தின் தரித்திரர் - யாக். 2:5

## பெப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Nisha Rajan |
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Felsi Rani John | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Shiney Johan |
| Mrs. Juslin Jaslin | Mrs. Thamari Johnson |
| Mrs. Leela Gladson | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Mary Praveena Gobinath | |

## ஜனவரி மாத திருமறை அறிவுப்போட்டியில் சரியான விடைகள் எழுதி விடுபட்டவர்களின் பெயர்கள்

1. Josephin Anto Kingston
2. Vanitha Rani Prince

## மார்ச் 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 1-10 முடிய)

1. உண்மையுள்ள சாட்சிக்காரனாகிய ஆசாரியன் யார்?
2. சவுலின் ஊர் எது?
3. நாள் பார்க்கிறவர்கள் யார்?
4. மாயையின் கயிறுகளால் இழுத்துக்கொண்டு வரப்படுவது எது?
5. ஆண்டவர் வார்த்தையை யாருக்கு அனுப்பினார்?
6. தமஸ்குவின் தலை எது?
7. தேசத்தின் நன்மையை எப்போது புசிப்பீர்கள்?
8. மீதியானியர் வெட்டுண்ட கன்மலை எது?
9. ஏசாயாவின் வாய் எதனால் தொடப்பட்டது?
10. மெதுவாய் ஓடுகிற நதி எது?
11. மகிமையானவைகளின் மேலெல்லாம் என்ன உண்டாயிருக்கும்?
12. கர்த்தரின் வசனம் எங்கிருந்து வெளிப்படும்?
13. பொல்லாதவர்களின் வாய் எதைப் பேசும்?
14. மனமகிழ்ச்சியின் நாற்று யார்?
15. கர்கேமிசைப் போலான பட்டணம் எது?
16. ரெமலியாவின் குமாரன் யார்?
17. சணற்கூளம் யார்?
18. இருளில் நடக்கிற ஜனங்கள் எதைக் கண்டார்கள்?
19. யாராலே லீபனோன் விழும்?
20. கர்த்தர் பாத்திரத்தில் எதை எழுதச் சொன்னார்?

### பெப்ரவரி 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. லீலி புஷ்பங்களை – உன். 5:13
2. நேசர் - உன். 2:9

3. லீபனோன் - உன். 7:4
4. கீலேயாத் - உன். 4:1
5. நேசரின் தலைமயிர் - உன். 5:11
6. லீபனோன் - உன். 3:9
7. நாமம் - உன். 1:3
8. ராஜ குமாரத்தியின் சிரசு – உன். 7:5
9. வெள்ளைப்போளம் - உன். 5:5
10. ராஜகுமாரத்தியின் இடுப்பின் வடிவு – உன். 7:1
11. நேச வைராக்கியம் - உன். 8:6
12. குழிநரிகள், சிறுநரிகள் - உன். 2:15
13. வேடித்த மாதளம்பழம்போல் - உன். 4:3
14. வலதுகை – உன். 2:6
15. நேசரின் கால்கள் - உன். 5:15
16. இஸ்ரவேலின் சவுரியவான்களில் அறுபது சவுரியவான்கள் - உன். 3:7-8
17. நேசர் - உன். 5:10
18. பாகால் ஆமோனிலே – உன். 8:11
19. கலைமான் - உன். 2:17
20. தூதாயீம் - உன். 7:13

## பெப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Justus Martin |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. Daniel Raj P. | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Ramesh R. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |
| Mr. Johan Pratheep | |

May God Bless All

## Birthday Celebrants – March 2021

| | |
|---|---|
| $01^{st}$ March | Master. Stalin Joseph, S/o Mr. Selvamani |
| $02^{nd}$ March | Mr. Broosewelt |
| $02^{nd}$ March | Mr. Joel Gnanasekaran |
| $03^{rd}$ March | Master. Hadyn, S/o Mr. V.N. Rajan |
| $04^{th}$ March | Mrs. Jancy, W/o Mr. David Sundar Sing |
| $05^{th}$ March | Mr. S. Nethaji Jacob Durai |
| $05^{th}$ March | Master. Aaric Ryan, S/o Mr. C.A. Vinu |
| $07^{th}$ March | Mr. Jino John |
| $08^{th}$ March | Master. G. Liffin Sam, S/o Mr. Gnanadhas |
| $09^{th}$ March | Mr. Jerry Jones |
| $09^{th}$ March | Mrs. Esther, W/o Mr. Vimal Kumar Stephen |
| $11^{th}$ March | Mr. Vinobha Alagesan |
| $14^{th}$ March | Miss. Abisha Hanna, D/o Mr. Gobinath |
| $14^{th}$ March | Master. J.S. Jolan Shano, S/o Mr. Jino Retna Kumar |
| $16^{th}$ March | Mr. Giridharan, S/o Mr. Moorthy |
| $17^{th}$ March | Miss. Herlin Reniba, D/o Mr. Herbert Goldston |
| $17^{th}$ March | Miss. Aksha Judith Cynthiya, D/o Mr. Alex Baskar |
| $17^{th}$ March | Mr. B. Kingsly |
| $17^{th}$ March | Master. Ryan Nathaniel, S/o Mr. Berjin T.N |
| $18^{th}$ March | Master. S. Deejin Samuel, S/o Mr. Sujin Issac Samuel |
| $18^{th}$ March | Mr. C. Sujin |
| $19^{th}$ March | Miss. Asna, D/o Mr. J.P. Prince |
| $19^{th}$ March | Miss. Abeline Jismi, D/o Mr. P. Suresh |
| $22^{nd}$ March | Mrs. Mary Suja, W/o Mr. Kingsly |
| $22^{nd}$ March | Master. Asmith Sam Augustin, S/o Mr. Augustin |
| $24^{th}$ March | Mrs. Sujatha Shalini, W/o Mr. Jino Retna Kumar |

| | |
|---|---|
| 24th March | Miss. Rachel, D/o Mr. Gnana Ruban |
| 24th March | Miss. Hazel, D/o Mr. Gnana Ruban |
| 28th March | Mr. Jenil sing |
| 29th March | Miss. Reya Ann, D/o Mr. Prem Meshach |
| 29th March | Mrs. Jenshy Nelselin, W/o Mr. Lenin Raj |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. **இந்த புதிய மாதத்தில் திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.**

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. **வருகிற நாட்களில் நடைபெறும் தேர்தல்களுக்காகவும், நல்ல தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபிப்போம்.**

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......

6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – மார்ச் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மேலும் ஒரு புதிய மாதத்தைக்காண கர்த்தர் நமக்கு கிருபை செய்திருக்கிறார். இந்த 2020-வது ஆண்டில் இதுவரை திருமறையை ஒருமுறையாவது முழுமையாய் வாசிக்காதவர்கள் உண்டென்றால் அதை வாசிக்க ஆவல்கொள்ளுங்கள். அதற்கான திருமறைப்பகுதி இந்த வருடத்தின் துவக்கத்திலிருந்து தரப்படுகிறது. திருமறையை முழுவதுமாக ஒரு முறையாவது வாசிப்பது நமது மனதுக்கு மகிழ்வைத் தரும்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மார்ச் 1 | திங்கள் | லூக். 23:7-12 | லூக். 23:11 | உபாகமம் 29 |
| மார்ச் 2 | செவ்வாய் | மத். 27:15-26 | மத். 27:24 | ஊபா. 30-31 |
| மார்ச் 3 | புதன் | யோவா. 18:13-24 | யோவா.18:24 | ஊபா. 32-34 |
| மார்ச் 4 | வியாழன் | யோவா. 18:24-28 | யோவா.18:28 | யோசுவா 1-4 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **மார்ச் 5** | **வெள்ளி** | **லூக். 23:50-53** | **லூக். 23:50** | **யோசுவா 5-7** |
| மார்ச் 6 | சனி | மத். 27:51-54 | மத். 27:54 | யோசுவா 8-10 |
| மார்ச் 7 | ஞாயிறு | 2இரா. 20:1-11 | 2இரா. 20:3 | யோசு. 11-14 |
| மார்ச் 8 | திங்கள் | மத். 27:17-19 | மத். 27:19 | யோசு. 15-18 |
| மார்ச் 9 | செவ்வாய் | யோவா. 19:25-27 | யோவா.19:26 | யோசு. 19-21 |
| மார்ச் 10 | புதன் | யோவா. 20:11-18 | யோவா.20:18 | யோசு. 22-24 |
| மார்ச் 11 | வியாழன் | மத். 27:55-61 | மத். 27:61 | நியா. 1-3 |
| **மார்ச் 12** | **வெள்ளி** | **மாற். 15:40,41** | **மாற். 15:40** | **நியா. 4-5** |
| மார்ச் 13 | சனி | லூக். 23:26-31 | லூக். 23:27 | நியா. 6-8 |
| மார்ச் 14 | ஞாயிறு | லூக். 13:10-17 | லூக். 13:13 | நியா. 9-11 |
| மார்ச் 15 | திங்கள் | மாற். 14:66-70 | மாற். 14:69 | நியா. 12-15 |
| மார்ச் 16 | செவ்வாய் | மத். 27:27-31 | மத். 27:27 | நியா. 16-18 |
| மார்ச் 17 | புதன் | லூக். 23:10-23 | லூக். 23:18 | நியா. 19-21 |
| மார்ச் 18 | வியாழன் | மத். 21:1-11 | மத். 21:9 | ரூத் 1-4 |
| **மார்ச் 19** | **வெள்ளி** | **யோவா. 19:23-35** | **யோவா.19:35** | **1சாமு. 1-3** |
| மார்ச் 20 | சனி | மத். 27:39-41 | மத். 27:40 | 1சாமு. 4-7 |
| மார்ச் 21 | ஞாயிறு | லூக். 18:35-43 | லூக். 18:38 | 1சாமு. 8-10 |
| மார்ச் 22 | திங்கள் | லூக். 22:9-11 | லூக். 22:10 | 1சாமு. 11-13 |
| மார்ச் 23 | செவ்வாய் | லூக். 23:39-43 | லூக். 23:39 | 1சாமு. 14-15 |
| மார்ச் 24 | புதன் | மத். 27:35-36 | மத். 27:35 | 1சாமு. 16-17 |
| மார்ச் 25 | வியாழன் | மத். 26:45-47 | மத். 26:47 | 1சாமு. 18-20 |
| **மார்ச் 26** | **வெள்ளி** | **மத். 27:62-64** | **மத். 27:64** | **1சாமு. 21-24** |
| மார்ச் 27 | சனி | மத். 27:65-66 | மத். 27:66 | 1சாமு. 25:27 |
| மார்ச் 28 | ஞாயிறு | 1கொரி. 3:16-23 | 1கொரி. 3:16 | 1சாமு. 28-31 |
| மார்ச் 29 | திங்கள் | மத். 21:18-22 | மத். 21:19 | 2சாமு. 1-3 |
| மார்ச் 30 | செவ்வாய் | மாற். 12:13-27 | மாற். 12:17 | 2சாமு. 4-7 |
| மார்ச் 31 | புதன் | மத். 26:6-13 | மத். 26:12 | 2சாமு. 8:11 |
| ஏப்ரல் 1 | வியாழன் | மத். 26:17-30 | மத். 26:26 | 2சாமு. 12-13 |
| **ஏப்ரல் 2** | **வெள்ளி** | **மத். 27:45-56** | **மத். 27:50** | **2சாமு. 14-15** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**


**(For Private Circulation Only)**